அந்த கோரிக்கை அரசின் கவனத்தில் இருப்பதால் அங்கே எந்த எந்தப் பகுதியில் செக் டாம் அமைக்க முடியும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின் தங்கிய கிராமங்கள் அடங்கிய பகுதி. அது வறண்ட பகுதி. நிலத்தடி நீர் இன்றி தொடர்ந்து பருவ மழை தவறிக்கொண்டு வருவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலங்களை விற்று விட்டு அண்டை மாவட்டங்களுக்கு குடியேறிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த அணையை அரசு கட்டினால் 50 கிலோ மீட்டர் பரப்புக்கு நிலத்தடி நீர் ஊறும், சுமார் 7,500 ஏக்கர் நிலங்களுக்கு நீர் வசதி ஏற்பட்டு விவசாயிகள் பலன் பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த ஆண்டு 1987-88 ஆம் ஆண்டில் அதை சேர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னது போல் பாலாற்றுப் படுகை இப்போது டெபிசிட் படுகையாக அரசின் குறிப்பில் இருக்கிறது. 19—6—1981 லேயே பாலாற்றுப் படுகையில் புதிய பாசன திட்டங்கள், கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளுவதை தடுக்க அரசு முடிவு செய்து இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்கு இணங்க இப்போது எடுக்க முடியுமா என்ற முறையில் அதிகாரிகளிடம் சொல்லி அப்படி கட்ட முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

நெல்லிக்குப்பம் தொகுதி, தென்பெண்ணை ஆற்றில் வெள்ளத் தடுப்புச்சுவர்.

363—(*வினா எண். 9080) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் தென்பெண்ணை ஆற்று கரையோர காவலூர், அக்கடவல்லி, கள்ளிப்பட்டு ஆகிய ஊர்களை பாதுகாக்கும் நோக்குடன் கரை ஓரத்தில் வெள்ளத் தடுப்புசுவர் அமைத்துதர அரசு முன்வருமா?

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. மேற்படி கிராமங்களைக் காக்கும் பொருட்டு, தென்பெண்ணையாற்றுக்கு வெள்ளக்கரை 1972-ல் அமைக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அமைக்கத் தேவையில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற போது 1972-ல் கரைகள் சீரமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தென் பெண்ணையாற்றுக் கரையில் 20 கிராமங்கள், அந்தக் கரையின் ஓரத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு மக்கள் வாழ் கின்ற பகுதிகளாக இருப்பதால் மிகவும் தாழ்ந்த அளவில் ஏறத்தாழ 1 மீட்டர் உயரம் தான் அந்த கரை இருக்கிறது. அதிகாரிகள் சென்று அங்கே ஆய்வு செய்து இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அதிகார பெரு மக்களை அனுப்பி திரும்பவும் சென்று பார்வையிட்டு நல்ல முறையில் அந்த மக்களுக்கு வெள்ளக் காலங்களில் அந்த கரை உடைபட்டு வீடுகள் எல்லாம் பாதிக்கப்படாமல் இருக்க அவர் களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகையில் அந்த ஆற்றுக் கரையை உயர்த்தித் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் தொகுதியில் நடந்த பிரச்சினையை மிகப்பெரியதாக சொன்னார்கள். அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், அங்கே போகிற நேரத்தில் அந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் உடன் அழைத்துச் சென்று அந்தப் பகுதியைப் பார்த்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.